**_DEPOSITION OF WITNESS_**
**_(Chapter XXIII Code of Criminal Procedure)_**

**_IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT_**
**_Mannargudi_**
**_DVC.No.47/2024 – P.W. 1_**

| | |
|---|---|
| *Name* | அபிராமி |
| *Father/Husband's Name* | சந்திரசேகர் |
| *Village* | கூத்தாநல்லூர் |
| *Age* | *32* |

***எதிர்மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை***

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.09.2025*

***எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை***

*1. நான் தற்போது எனது தகப்பனார் வீட்டில் இருந்து வருகிறேன். எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எனது தகப்பனார் வீடு சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். கடைசியாக எனது பிள்ளைகளை எப்போது பார்த்தேன் என்றால்-நீதிமன்றத்திற்கு எதிர்மனுதாரர் அழைத்து வந்தபோது பார்த்தேன். நீதிமன்றத்தில் பார்த்ததற்கு பின்பு நான் பார்க்கவில்லை. எனது வீட்டிலிருந்து எனது பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கும் இடையே சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். எந்த மாதம் எனது பிள்ளைகளை பார்த்தேன் என்றால்-இந்தவருடம் 5 வது மாதம் பார்த்தேன். எனது கணவருடன் வாழ்வதற்கு எனக்கு விருப்பம் உள்ளதா என்றால் விருப்பம் இல்லை. எனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று சொன்னதால் தான் ம.சா.ஆ-3 ஆவணம் எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான்.*

*2. மேற்படி பஞ்சாயத்து எனது அப்பா ஊரான காவாலக்குடியில் நடந்தது என்றால்-சரிதான். காவாலக்குடியில் பஞ்சாயத்து பேச சொல்லி மனு யாரால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால்-1ம் எதிர்மனுதாரரால் கொடுக்கப்பட்டு பேசப்பட்டது. எதற்காக மனு கொடுத்தார் என்றால்-என்னுடன் சேர்ந்து வாழ வைக்கக் கோரி மனு கொடுத்தார். அப்போது நான் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று சொன்னதால் ம.சா.ஆ-3 ஆவணத்தில் கையொப்பம் செய்து கொடுத்தேன்.*

3. எதிர்மனுதாரரால் கொடுக்கப்பட்ட ம.சா.ஆ-2 வழக்கறிஞர் அறிவிப்பு எனது கணவரான 1ம் எதிர்மனுதாரரால் கொடுக்கப்பட்டது என்றால்-சரிதான். அவருடன் சேர்ந்து வாழ வரசொல்லிதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால்-சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால்-இல்லை.

4. நானும் எனது கணவரும் 5 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனக்கு 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாத காரணத்தினால் தான் அவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால்-சரிதான். ம.சா.ஆ-3 ஆவணம் ஏற்படுத்தியபோது கிராமத்தில் சுமார் 100 நபர்கள் இருந்திருப்பார்கள். அதில் அங்குள்ள முக்கியஸ்தர்கள் தான் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால்-சரிதான். நான் எனது மனுவில் சொல்லியுள்ள கட்டில், மெத்தை, பீரோ, இருசக்கர வாகனம் ஆகியவை எனது அப்பாவால் வாங்கப்பட்டது. அதற்கான ரசீது உள்ளதா என்றால்-இல்லை.

5. திருமணத்தின்போது போடப்பட்டதாக சொல்லப்படும் நகைகளுக்கு ரசீது உள்ளதா என்றால்-இல்லை. நான் 1ம் எதிர்மனுதாரரின் அக்கா மகள் என்பதால் அவர்தான் எனக்கு நகைகளை வாங்கிக் கொடுத்தார் என்றாலும், அதற்காக ரசீதுகள் 1ம் எதிர்மனுதாரரிடம் உள்ளது என்றாலும்-சரியல்ல. எனது தகப்பனார் வீட்டில் எந்தவொரு நகைகளும் போடாத காரணத்தினால் தான் அதற்கான ரசீதுகள் எங்களிடம் இல்லை என்றால்-சரியல்ல.

6. திருமணத்திற்கான மண்டப செலவு, கல்யாண இதர செலவுகள் அனைத்தும் 1ம் எதிர் மனுதாரர் தான் செய்தார் என்றாலும், எனது பெற்றோர் வீட்டில் செய்யவில்லை என்றாலும்-சரியல்ல. எனக்கு சட்டரீதியான விவாகரத்து வேண்டும். விவாகரத்து சட்டரீதியாக கிடைக்க வேண்டும் என்றால்-அதற்குரிய நீதிமன்றத்தில் தற்போது வரை விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால்-அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

7. குழந்தைகள் எனக்கு வேண்டும் என்று நீதிமன்றத்தில் சொல்லும் நிலையில் அதற்குரிய மனுவை உரிய நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால்- அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. முதன்முதலாக ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டு காவாலக்குடியில் வீடு பார்த்து 1ம் எதிர்மனுதாரரும், குழந்தைகளும் அங்கு தான் இருந்தார்கள். அதற்கு பிறகு எனது கணவர் பிரிந்து செல்லும்பொழுது குழந்தைகளும் அவருடன் சென்றுவிட்டார்கள்.

8. கடந்த 2 ஆண்டுகளாக தான் 1ம் எதிர்மனுதாரருடன் எனது குழந்தைகள் இருந்து வருகிறார்கள். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் என்னை வேறு ஒரு நபருடன் தொடர்பு படுத்தி 1ம் எதிர்மனுதாரர் சொல்லி வந்தார் என்றால் மேல்கொண்டாழியில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் தெருவிற்கு பக்கத்து தெருவில் உள்ள சுரேந்திரன் ஆவார். சுரேந்திரன் என்பவருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவரது மனைவி அவரது வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. அவருடைய வீட்டில் தான் இருந்து வருகிறார்.

9. எனது கணவரான 1ம் எதிர்மனுதாரரான அவரது வழக்கறிஞர் அறிவிப்பில் வேறொரு நபருடன்தொடர்பு இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அவருடன் தொடர்பில் இருந்து வருகிறீர்களா என்றால்-இல்லை. சுரேந்திரன் என்பவருடன் நான் தொடர்பில் இருந்து வருவதால் தான் என் கணவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று சொல்லிவருகிறேன் என்றால்-சரியல்ல. சுரேந்திரன் மற்றும் எனக்குமிடையே தொடர்பு இருப்பதாக சொல்லி ஊரில் பஞ்சாயத்து பேசினார்களா என்றால்-இல்லை.

10. என்னுடைய மனுவில் 1ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு அடிப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்-சரியல்ல. எனது கணவர் குடித்துவிட்டு அடிப்பதாக சொல்லி காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால்-திருவாரூர் மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்தேன். 1ம் எதிர்மனுதாரர் கூத்தாநல்லூரில் உள்ள வீட்டில்தான் என்னை அடித்தார் அது தொடர்பாக கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால்-சரிதான். திருவாரூர் மகளிர் காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாருக்கு மனு ரசீது புகாரின் நகல் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால்-இருக்கிறது என்று நினைக்கிறேன்.

11. நான் புகார் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் 1ம் எதிர்மனுதாரரை அழைத்து விசாரித்திருப்பார்கள் என்றால்-சரியல்ல. நான் சொல்வது போல உண்மையிலேயே புகார் கொடுத்திருந்தால் அதற்கான நகல், மனு ரசீது ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால்-சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளது போல சீர்வரிசை பொருட்கள் நகைகள் ஆகியவற்றை கேட்டு 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறையில் ஈடுபடவில்லை என்றால்-சரியல்ல.

*12. காவாலக்குடியில் உள்ள கோவில் நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் சாகுபடி செய்து வந்தபோது நானும் எனது தகப்பனாரும் அவரை அடித்து காயப்படுத்தினோமா என்றால்-நான் குழந்தைகளை கேட்டு தான் 1ம் எதிர்மனுதாரரை மறித்தோம். அவர் கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் அதுகுறித்து சொன்னபோது கொரடாச்சேரி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கும் படி சொன்னார்கள். அப்போது 1ம் எதிர்மனுதாரர் சுமார் 1 வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால்-அதுபற்றி எனக்கு தெரியாது.*

*13. 1ம் எதிர் மனுதாரர் கொத்தனாராக கூலி வேலை செய்து வருகிறார். அதை தவிர அவருக்கு வேறு வருமானம் இல்லை என்றால்-சரிதான். வேலை கிடைத்தால் 1ம் எதிர்மனுதாரருக்கு சம்பளம் என்றாலும், வேலை இல்லை என்றால்-சம்பளம் இல்லை என்றால்-சரிதான். 1ம் எதிர்மனுதாரரிடம் பணம் பெற வேண்டும் என்பதற்காக கூலி வேலை செய்யும் எனது கணவரை துன்பப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால்-சரிதான்.*

*14. தற்போது வரை 1ம் எதிர்மனுதாரர் எனது 2 குழந்தைகளையும் கூலி வேலை செய்து கொண்டு அவர்களையும் பராமரித்து பள்ளிக்கு அனுப்பி வருகிறார் என்றாலும், நான் ஒரு பொறுப்பில்லாத தாயாகவும் இருந்து வருகிறேன் என்றால்-சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையை அவருக்கு வழங்க வசதி இல்லை என்றாலும், நான் கோரியுள்ள எந்தவொரு பரிகாரத்தையும் 1ம் எதிர்மனுதாரரால் வழங்க இயலாது என்றால்-சரியல்ல. ஒரு பொறுப்பற்ற தாயாக இருந்து வருகிற எனக்கும் நீதிமன்றத்தில் பரிகாரம் கோருவதற்கு தகுதி இல்லை என்றால்-சரியல்ல. தற்போது வரை 1ம் எதிர்மனுதாரர் தயாராக உள்ளார் என்றால் எனக்கு அவருடன் வாழ விருப்பமில்லை.*

ஒம்/-திருமதி.ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
கூத்தாநல்லூர்.